# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 31.05.12 | | மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள V.V.D. Signal மேம்பாலம் அமைத்தல் பணியின் திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாகவும் தூத்துக்குடி மாநகராட்சியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், நல்லதண்ணீர் கால்வாய் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தினை மீட்க நடவடிக்கை மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தூத்துக்குடி மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. L.சசிகலா புஷ்பா அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. | 94) ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது |
| 31.05.12 | 1. | இம்மாநகராட்சி பணியாளர் திரு. ஏ.இராஜேந்திரன், பொறியியர் பிரிவு மெக்கானிக் உதவியாளர் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ.10000/— வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக் கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ.10000/—ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி4/7484/12 | 95) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சியின் கட்டிட உரிமம் மற்றும் இதர கட்டணங்கள் மாமன்ற தீர்மானம் எண் 43 நாள் 30.032012ன்படி 01.04.2012 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமம் மற்றும் இதர கட்டணங்களின் (Schedule of Rates) பட்டியலை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br>எப்1/21218/05 | 96) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சி சிவந்தாகுளம் டுவிபுரம் துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி கடந்த 31.05.2007ல் ஓய்வு பெற்ற திரு.ஆ.அன்னலெட்சுமி என்பவருடைய பணிகாலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2640/— மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.1572/— ஆக மொத்தம் ரூ.4212/— அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 97) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக்குறிப்பு:</u>** சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.4212/—ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/09406/11 | |
| | 4. | இம்மாநகராட்சி சிவந்தாகுளம் நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி கடந்த 31.05.2008ல் ஓய்வு பெற்ற திரு. மு.காளிமுத்து என்பவர் பணிகாலத்தில் அன்னாருடைய ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2640/— மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.1572/— ஆக மொத்தம் ரூ.4212/— அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.4212/—ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/0762/12 | 98) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. | இம்மாநகராட்சி சிவந்தாகுளம் நடுநிலைப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி கடந்த 31.05.2010ல் ஓய்வு பெற்ற திருமதி. வைலட் லலிதா வேதமணி என்பவருடைய பணிகாலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2640/— மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ.1572/— ஆக மொத்தம் 4212/— அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.4212/—ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/07093/12 | 99) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. | ஆணையர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண் 21802/2011—UP1 நாள் 30.03.2012ல் பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு மானியமாக வழங்கப்பட்ட 2.25 லட்சத்தினை அரசு, தனது அரசாணை எண் 71 குடியிருப்பு மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை நாள் 21.03.2012ல் ரூ.10 லட்சமாக உயர்த்தி, அதில் 90 சதவீதம் அரசு மானியமாகவும், 10 சதவீதம் உள்ளாட்சி அமைப்பு நிதியாகவும் பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு உரிய பிரேரணைகளை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட 8 பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்த வகையில் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக நடைமேடை அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.100.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>1) ரோச் பூங்கா அபிவிருத்தி பணி செய்ய — ரூ. 10.00 லட்சம்<br>2) எழில்நகர் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய — ரூ. 10.00 லட்சம்<br>3) வி.வி.டி. பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய — ரூ. 10.00 லட்சம்<br>4) முத்தம்மாள் காலனி பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய —ரூ. 11.50 லட்சம்<br>5) தனசேகரநகர் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய — ரூ. 13.50 லட்சம்<br>6) கதிர்வேல்நகர் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணி — ரூ. 14.50 லட்சம்<br>7) பீச்ரோடு நேரு பூங்காவில் அபிவிருத்தி பணிகள் — ரூ. 11.50 லட்சம்<br>8) காந்திநகர் (மீளவிட்டான்) பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணி — ரூ. 19.50 லட்சம்<br>——————————<br>மொத்தம் — ரூ.100.50 லட்சம்<br>—————————— | 100) பூங்கா அமைவிடம் மற்றும் மக்கள் பயன்பாட்டு சதவீதம் ஆகியவற்றின் அடிப்படையில் பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்து திருத்திய மன்றப்பொருள் தயார் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. |

மேற்கண்ட 8 பூங்கா மேம்பாட்டு பணிகளை எடுத்து செய்யவும், அதற்கான மதிப்பீடுகளை அனுமதிக்கவும் 90% அரசு மான்யமாக ரூ.72.00 லட்சம் பெறவும், மீதமுள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/6756/2012

7. இம்மாநகராட்சி டூவிபுரம் துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி கடந்த 31.05.2010ல் ஓய்வு பெற்ற திருமதி. ஜெயராணி என்பவருக்கு அன்னார் பணிகாலத்தில் அன்னாரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2580/— மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ.1489/— ஆக மொத்தம் 4069/— அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித் தொகை ரூ.4069/—ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி4/07093/12

101) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள அத்திமரப்பட்டி ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் வளர்ச்சி பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு நிலுவையாக உள்ளதாகவும் அதனை வழங்கிட தூத்துக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) தனது கடித எண் தி3/1959/2009 நாள் 14.12.2011ல் கேட்டுக்கொண்டுள்ளார். தற்போது அக்டோபர் 2011 முதல் தேர்தல் நடைபெற்ற அனைத்து கிராம பஞ்சாயத்து நடவடிக்கைகளும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு, தூத்துக்குடி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. எனவே செலவினத் தொகையினை மாநகராட்சி பொதுநிதியில் இருந்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | செலவின விபரம் | தொகை ரூ. | காசோலை வழங்க வேண்டிய நபர் பெயர் |
|---|---|---|---|
| 1 | பேப்பர் சந்தா (ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் 2011ம் மாதங்கள்) | 2178/— | எம். சண்முகசுந்தரம், ஸ்பிக் நகர் |
| 2. | பேப்பர் சந்தா (ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் 2011ம் மாதங்கள்) | 2940/— | ஜெ.ஜெயகிருஷ்ணன், ஸ்பிக்நகர் |
| 3. | எழுதுபொருள் மற்றும் ஜெராக்ஸ் (செப்டம்பர், அக்டோபர் 2011ம் மாதம்) | 1850/— | ராஜிவ் ஜெராக்ஸ் & எஸ்.டி.டி.பூத், ஸ்பிக்நகர் |
| 4. | மேல்நிலை மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி சுத்தம் செய்தல் (செப்டம்பர், அக்டோபர் 2011ம் மாதம்) | 19900/— | திரு. வி.கிருஷ்ணபெருமாள், ஒப்பந்தகாரர், தவசிபெருமாள் சாலை |
| 5. | சுகாதாரம் பராமரிப்பு (செப்டம்பர், அக்டோபர் 2011ம் மாதம்) | 22000/— | திரு. எஸ்.செல்வராஜ், ஒப்பந்தகாரர், முள்ளக்காடு |
| 6. | தெருவிளக்கு பராமரிப்பு | 1280/— | திரு. சுடலைமுத்து, வயர்மேன், தமிழ்நாடு மின்சார வாரியம் |
| 7. | தெருவிளக்கு பராமரிப்பு | 1100/— | திரு. சுப்பிரமணியன் வயர்மேன், தமிழ்நாடு மின்சார வாரியம் |
| 8. | ஈமக்கிரியை | 2500/— | திரு எஸ்.செல்வம், பாரதிநகர் |
| 9. | சுகாதார பொருட்கள் வாங்கியது | 3750/— | தேகோ பாபுனேஸ் & கோ, தூத்துக்குடி |
| 10. | கிணறு பராமரிப்பு | 17150/— | திரு. மந்திரமூர்த்தி, ஒப்பந்தகாரர், முத்தையாபுரம் |

102) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 11. | பைப்லைன் பராமரிப்பு | 69870/– | கதிர்வேல், ஒப்பந்தகாரர், முத்தையாபுரம் |
| 12. | சிறுபாலம் அமைத்தல் | 94111/– | |
| 13. | புதிய சாலை அமைத்தலும் மேம்பாடு செய்தலும் | 83538/– | |
| 14. | சுகாதார (ம) குடிநீர் பராமரிப்பு பணியாளர் செப்டம்பர் 2011ம் மாத சம்பளம் | 10800/– | தனது காசோலை |
| 15. | தொலைபேசி கட்டணம் | 5830/– | கணக்கு அலுவலர், பி.எஸ்.என்.எல். தூத்துக்குடி |
| | மொத்தம் | 338797/– | |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அக்டோபர் 2011 முதல் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று அத்திமரப்பட்டி ஊராட்சி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு அனைத்து ஊராட்சி அலுவலக பணிகளும் மாநகராட்சியில் நடைபெறுவதால் மேற்படி செலவின தொகையினை ஊராட்சி மன்ற நிதியிலிருந்து பெறப்பட்ட தொகையிலிருந்து வழங்கிட அனுமதி வழங்கலாம்.

இ2/7817/12

| | | | |
|---|---|---|---|
| | 9. | இம்மாநகராட்சிக்குச் சொந்தமான, வல்லநாடு தலைமை நீர்பணியிடம், 1வது பழைய பைப்லைன் திட்டத்திலுள்ள 175 கு.வே. மின்மோட்டாரை, மின்தடை காலத்தில் இயக்கிட ஏதுவாக ஓர் புதிய 320KVA திறன்கொண்ட ஜெனரேட்டர் பொருத்தி, இது தொடர்பான, பணிகள் செய்து இயக்கித் தரும் பணிக்கு இம்மாமன்றம் அனுமதி வழங்கியதின் பேரில் (மாமன்ற அனுமதி எண் 476, நாள் 16.11.2011) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரபெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3179200/– ஆகும். தற்போது ஒப்பந்ததாரரிடம் Negotiation கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் மதிப்பீடு விலையிலிருந்து ரூ.1186/– குறைவாக செய்து சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார். அதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் ஜெனரேட்டருக்கான வரி உயர்த்தப்பட்டுள்ளதால், தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை உயரவும் வாய்ப்புள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டுஅடிக்கடி ஏற்படும் மின் தடையினை கருத்திற்கொண்டு, குடிநீர்ப்பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br>மா.ந.க.எண். 14866/இ3/11 | 103) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. | இம்மாநகராட்சியில் கட்டிட வேலைகளில் தொழில்நுட்பமுள்ள கட்டிடம் கட்டுபவர்கள் மற்றும் அளவர்கள் உரிமம் வழங்க தேவையான உபவிதிகள் மற்றும் நிபந்தனைகள் மாமன்ற தீர்மான எண் 44 நாள் 30.03.2012ல் ஒப்புதல் பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி உபவிதிகள் மற்றும் நிபந்தனைகளை தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br>எப்1/705/12 | 104) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குப்பைகள் அகற்றும் பணிக்கு தேவையான டம்பர்பின் $2.5m^3$ to $3.00m^3$ வாங்குவதற்கு 25.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு 4 ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>1) ஜி.எஸ்.பாடிபில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை<br>2) ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர்<br>3) NSR எல்கமெட் பிரைவேட் லிமிடெட், சென்னை<br>4) மகாவிஷ்ணு லேசர் இண்டஸ்ரி கோயம்புத்தூர் | 105) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இதில் மகாவிஷ்ணு லேசர் இண்டஸ்ரி நிறுவனத்தினர் EMD மட்டும் தான் வைத்து இருந்தனர். Technical Bid எதுவும் கிடையாது. ரவி மெட்டல் ஒர்க்ஸ் வேலூர் நிறுவனத்தினர் EMD, ISO certificate மற்றும் 200 Nos. சப்ளை செய்ததற்கு உரிய Single சப்ளை order எதுவும் அவர்களிடம் இல்லை. G.S. பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்தினரிடம் Pre Qualification Criteria item No'4'ன்படி குறைந்தது 200 எண்ணம் டம்பர்பிளேசர் பின் S.Sல் Single Aggrementல் சப்ளை செய்த order எதுவும் இல்லை. அதற்கு குறைவான அளவு சப்ளை செய்யப்பட்டிருந்த orderகள் மட்டுமே இருந்தது. எனவே Technical facilities சரியாக இல்லாததால் மேற்படி 3 ஒப்பந்தப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்பட்டது. Technical Qualification சரியாக இருந்த NSR எல்கமெட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரின் Price bid திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>148 எண்ணம் சப்ளை செய்ய exise Duty Vat, Transport உட்பட ரூ.10702916/- எண்ணம் ஒன்றிற்கு ரூ.72317/- என விலை விகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரிடம் Negotiation கேட்கப்பட்டதில் 148 எண்ணம் சப்ளை செய்வதற்கு ரூ.10098040/- எண்ணம் ஒன்றுக்கு ரூ.68230/- என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பார்வையிட்டு, பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | |
| | 12. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குப்பைகள் அகற்றும் பணிக்கு தேவையான காம்பாக்டர் பின் வாங்குவதற்கு 25.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு 3 ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப் பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>1) KAM AVIDA MULSHI<br>2) ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர்<br>3) NSR எல்கமெட் பிரைவேட் லிமிடெட், சென்னை<br><br>இதில் NSR எல்கமெட் நிறுவனத்தை தவிர மற்ற இரண்டு நிறுவனத்தாரும் EMD செலுத்தவில்லை. KAM EVIDA நிறுவனத்தினர் EMD ISO Certificate மற்றும் Central Exise Registration certificate Experience Certificate எதுவும் இணைக்கவில்லை. Ravi metal works நிறுவனத்தினர் EMD, Central exise Registration certificate இரண்டும் இணைக்கவில்லை. எனவே Technical facilities சரியாக இல்லாததால் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்பட்டது. Technical Qualification சரியாக இருந்த NSR எல்கமெட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரின் Price bid திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் விபரம்,<br><br>60 எண்ணம் காம்பாக்டர் பின் சப்ளை செய்ய exise Duty Vat, Transport உட்பட ரூ.1791180/- எண்ணம் ஒன்றிற்கு ரூ.29853/- என விலை விகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate விலைவிகிதம் கொடுத்துள்ளனர். 60 எண்ணம் சப்ளை செய்வதற்கு ரூ.1686000/-, எண்ணம ஒன்றிற்கு ரூ.28100/- என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பார்வையிட்டு, பரிசீலித்து அனுமதிக்கலாம்<br><br>இ1/14912/2011 | 106) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிக்கு தேவையான Sullage Lorry வாங்குவதற்கு 25.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒரு எண்ணம் ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு 1) என்.எஸ்.ராமாராவ் பாடிபில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, | 107) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இதில் தொழில்நுட்ப விபரங்கள் அனைத்தும் சரியாக இருந்ததால் Price bit திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>இரண்டு எண்ணம் Sullage Tanker Lorry Vat, insuraace, Road Tax அனைத்தும் உட்பட ரூ.5904034/–. வாகனம் ஒன்றுக்கு ரூ.2952017/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate விலைவிகிதம் கொடுத்துள்ளனர். 2 எண்ணம் Sullage Tanker lorry of 8200 Litres Capacity சப்ளை செய்வதற்கு ரூ.5800004/– எண்ணம் ஒன்றிற்கு ரூ.2900002/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பார்வையிட்டு, பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல் செலவினம் மாமன்ற பொது நிதியிலிருந்து வழங்கலாம்.<br>இ1/15877/2011 | |
| | 14. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குப்பைகள் அகற்றும் பணிக்கு தேவையான டம்பர் பிளேசர் வித்சேஸிஸ் வாகனம் வாங்குவதற்கு 25.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு 3 ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப் பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>1) கிரிஸ்டல் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை,<br>2) என்.எஸ்.ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை,<br>3) ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை<br><br>பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் Pre Qualification Criteria item No. '4'ன்படி குறைந்தது 10 எண்ணம் டம்பர் பிளேசர் வித்சேஸிஸ் வாகனம் Single Aggreementல் கடந்த 3 ஆண்டு காலத்தில் சப்ளை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்கிற Technical Facilities-ன்படி Single Aggreement work order N.S. ராமாராவ் பாடிபில்டர்ஸ் சென்னை நிறுவனத்தாரிடம் மட்டுமே இருந்ததால் மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனுடைய Price bid திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு 8 எண்ணம் டம்பர் பிளேசர் வித் சேஸிஸ் வாகனத்திற்கு வெகிகிள், டெலிவரி சார்ஜஸ், இன்சுரன்ஸ், ரெஜிட்ரேசன், ரோடு டாக்ஸ் வாட் அனைத்தும் சேர்த்து விலைவிகிதம் ரூ.13553448/– வாகனம் ஒன்றின் விலைவிகிதம் ரூ.1694181/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate விலைவிகிதம் கொடுத்துள்ளனர். 8 எண்ணம் Twin Dumber Placer with chasis சப்ளை செய்வதற்கு ரூ.13225448/– எண்ணம் ஒன்றிற்கு ரூ.1653181/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பார்வையிட்டு, பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | 108) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 15. | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த புறநகர் பேருந்து நிலையம் தூத்துக்குடி பைபாஸ் ரோடு மீன்வளக்கல்லூரி எதிரில் தொழில்துறைக்கு சொந்தமான இடத்தில் அமையவிருக்கிறது. மேற்படி இடத்தில் இவ்வலுவலக மாமன்ற தீர்மான எண் 494 நாள் 29.12.2011ல் அரசு முழு மானியத் தொகை பெற்று மேற்கண்ட இடத்தில் பணி செய்ய மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>எனவே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க உரிய விரிவான திட்டம் வரைவுகள் தயார் செய்ய தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்ய 15.02.2012ல் ஒப்பந்தப்புள்ளி கோரி தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸில் இந்திய அளவிலும், மக்கள் குரலில் தமிழ்நாடு அளவிலும் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு மெஸ்ஸர்ஸ் அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை ரூ.120977/–க்கு பட்டியல் | 109) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கியுள்ளார்கள். தொகையினை வழங்கவும், தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதிக்கலாம்.<br><br>இ1/15104/2011 | |
| | 16. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்– 3 (TNUDP – III)இன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணி, கழிவு நீரேற்று நிலையங்களை உள்ளடக்கிய 3 சிப்பங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி 1 சிப்பம் என 4 சிப்பங்களை கொண்டு பாதாளச் சாக்கடை திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்து கொள்ளப்பட்டது.<br><br>மேற்படி திட்டத்திற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில், அமைக்க ஆரம்ப கட்ட பணி துவங்கும் பொழுது மேற்கண்ட பகுதியை சுற்றியுள்ள வார்டு பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பாதியில் நிறுத்தம் செய்யப்பட்டது.<br><br>பின்னர் மாநகராட்சிக்கு சொந்தமான தருவைகுளம் பகுதியில் உள்ள உரகிடங்கு அருகில் செயல்படுத்த மாமன்றம் தனது தீர்மானம் எண் 268, நாள் 16.12.2010இல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.<br><br>இச்சூழ்நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்த ஆய்வு நடத்தப்பட்டதில், சில தொழில்நுட்ப நிறுவனங்கள் முன் வந்துள்ளன. மேற்படி ஆய்வில் சுத்திரிக்கப்பட்ட கழிவுநீரின் தன்மை நல்லநிலையில் இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.<br><br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு வரும் புதிய தொழில்நுட்பத்தில் (ASP – Activated Sludge Process Technology) வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் குறியீட்டு அளவில் இருக்க வேண்டும் என்பதாலும், மேலும் புதிய முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காகும் மூலதன செலவினமும் அதிகமாகும்.<br><br>ஆகையால் கழிவுநீர் சுத்திகரிப்பு பணியினை வடிவமைப்பு கட்டிட நிதி இயக்குதல் முறையில் பராமரித்து மீள சமர்ப்பித்தல் (DBFOT – Design Built Finance Operation Technology) முறையில் செயல்படுத்தினால் மாநகராட்சிக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதற்கும் போதுமான தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் முறையாக செய்வதற்கு தேவையான ஒப்பந்தப்புள்ளி சீராய்வு செய்தல், ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்தல், போன்ற முழுவதுமான ஆலோசனைகள் வழங்க ஒரு கலந்தாலோசகர் (Transaction Adviser) நியமனம் செய்வது அவசியம். ஆதலால் கலந்தாலோசகர் (Transaction Adviser) நியமிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்றிடவும், அதற்காகும் செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3 (TNUDP-III) திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/11512/07–STP | 110) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 17. | இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடு செய்யும் நிதி திட்டம் 2011–2012ன் கீழ் (Operation and maintenance Gab filling fund 2011/2012) இம்மாநகராட்சி வல்லநாடு, பணியிடம் புதிய திட்டத்தில் 170 கு.வே. மின் மோட்டார் மற்றும் பம்ப் செட் புதிதாக பொருத்தி இது தொடர்பான பணிகள் செய்து இயக்கிடும் பணிக்கு இம்மாமன்றம் கடந்த 30.03.2012 (தீர்மான எண் 48) அன்று அனுமதி அளித்ததின் பேரில் கடந்த 02.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு, | 111) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1) மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை–1<br>2) மெசர்ஸ் அல்கம் இண்டஸ்ரிஸ், மேட்டுப்பாளையம்,<br>3) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை–3<br><br>பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப விபரங்களை சரிபார்த்து, அவற்றிற்கு ஒப்பு நோக்குப் பட்டியல் (Technical Evaluation) தயார் செய்ததில், மெசர்ஸ் ரோக்கால் அன்கோ மற்றும் ஆனந்தா எண்டர்பிரைசஸ் நிறுவனங்கள் சப்ளை செய்யும் பம்பின் அங்கீகார சான்றிதழ்களை (Authorized Dealer certificate) இணைத்திருந்தனர். மெசர்ஸ் அல்கம் இண்டஸ்ரிஸ் நிறுவனம் மேற்படி சான்றிதழை இணைக்கவில்லை. எனவே மேற்கண்ட அல்கம் இண்டஸ்ரிஸ், மேட்டுப்பாளையம் என்னும் ஒப்பந்தப்புள்ளியை தள்ளுபடி செய்து மற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் தரப்பட்டுள்ளது.<br><br>1) மெசர்ஸ் ரோக்கால் &கோ, மதுரை (ரூ.1173400/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ் (ரூ.1165800/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>மதுரை–3<br><br>மதிப்பீட்டை விட குறைவாக விலைவிகிதம் தந்துள்ள மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை நிறுவனத்திடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் ரூ.1161900/– விலை விகிதம் தந்துள்ளார்கள்.<br><br>மேற்கண்ட விலைவிகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>மா.ந.க.எண்.06012/இ3/12 | |
| | 18. மதிப்பீடு தொகை ரூ. 97.00 இலட்சம் **சிப்பம் எண் : 2 (வடிகால் பணி)**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 3மழைநீர் வடிகால்பணி செய்ய 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 09.04.2012 அன்று மறுஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 2 வடிகால் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>1) திரு ஐ. ஜெயசீலன், ஒப்பந்தகாரர்<br>2) திரு.எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தகாரர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தகாரர்களும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடையவர்களாக இருந்ததால் 18.05.2012 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகளும் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. திரு ஐ. ஜெயசீலன், ஒப்பந்தகாரர் மதிப்பீட்டிற்கு 11.30% அதிகம்<br><br>2. திரு.எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தகாரர் மதிப்பீட்டை விட 12.26% அதிகம்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.ஐ.ஜெயசீலன் அவர்கள் ரூ.9893070/– (மதிப்பீட்டை விட 4.99% அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 112) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/14912/2011 | |
| | 19. | இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடு செய்யும் நிதி திட்டம் 2011–2012ன் கீழ் (Operation and maintenance Gab filling fund 2011–2012) இம்மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு, தலைமை நீர்பணியிடம் புதிய திட்டத்தில் உள்ள நீர் உரிஞ்சும் கிணறு எண் I மற்றும் IIல் தலா ஒரு எண்ணம் புதிய 35 கு.வே. மின் மோட்டார் மற்றும் 40 கு.வே. மின் மோட்டார் மற்றும் பம்ப் செட் மாற்றி அமைக்கும் பணிக்கு இம்மாமன்றம் கடந்த 30.03.2012 நாளன்று தீர்மான எண் 48இல் அனுமதி அளித்ததின் பேரில் கடந்த 02.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br>1) மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை–1<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை–3<br>3) மெசர்ஸ் அல்கம் இண்டஸ்ட்ரிஸ், மேட்டுப்பாளையம்,<br>பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப விபரங்களை சரிபார்த்து, அவற்றிற்கு ஒப்பு நோக்குப் பட்டியல் (Technical Evaluation) தயார் செய்ததில், பம்பின் அங்கீகார சான்றிதழினை (Authorized Dealership certificate) மெசர்ஸ் ரோக்கால் அன் கோ, மதுரை மற்றும் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை ஆகிய நிறுவனங்கள் இணைத்துள்ளனர், மெசர்ஸ் அல்கம் இண்டஸ்ரிஸ், மேட்டுப்பாளையம் நிறுவனம் இணைக்கவில்லை. எனவே மேற்கண்ட அல்கம் இண்டஸ்ரிஸ், மேட்டுப்பாளையம் என்னும் ஒப்பந்தப்புள்ளியை தள்ளுபடி செய்யப்பட்டது. மற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கொடுத்துள்ளனர்.<br>1) மெசர்ஸ் ரோக்கால் &கோ, மதுரை (ரூ.2188620/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ் (ரூ.2206520/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார் மதுரை–3<br>மதிப்பீட்டை விட குறைவாக விலைவிகிதம் தந்துள்ள மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை நிறுவனத்திடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் ரூ.2185020/– விலை விகிதம் தந்துள்ளார்கள்.<br>மேற்கண்ட விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>மா.ந.க.எண்.04779/இ3/12 | 113) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 20. | இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடு செய்யும் நிதி திட்டம் 2011–2012ன் கீழ் (Operation and maintenance Gab filling fund 2011–2012) இம்மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு, தலைமை நீர்பணியிடம் பழைய 1வது பைப்லைன் திட்டத்திலுள்ள 175கு.வே. பழைய மின் மோட்டாருக்கு பதிலாக, ஓர் புதிய 175 கு.வே. மின் மோட்டார் பொருத்தி, இயக்கிடும் பணிக்கு இம்மாமன்றம் தீர்மான எண் 48, நாள் 30.03.2012 அன்று அனுமதி அளித்ததின் பேரில், கடந்த 02.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br>1) மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை–1<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை–3 | 114) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப விபரங்களை சரிபார்த்து, அவற்றிற்கு ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இரு நிறுவனங்களும் சரியான தொழில் நுட்ப விபரங்களை இணைத்துள்ளனர். எனவே மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் தந்துள்ளனர்.<br><br>1) மெசர்ஸ் ரோக்கால் &கோ, மதுரை–1 (ரூ.565200/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ் (ரூ.568000/–) டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>மதுரை–3<br><br>மதிப்பீட்டை விட குறைவாக விலைவிகிதம் தந்துள்ள மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை–1 நிறுவனத்திடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் கீழ்க்கண்ட விலை விகிதம் தந்துள்ளார்கள். ரூ.564500/– மேற்படி விலை விகிதத்தை அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>மா.ந.க.எண்.06011/இ3/12 | |
| | 21. பொட்டல்காடு – குலையன்கரிசல் விலக்கு சாலையில் அமைந்துள்ள கல்வி நிறுவனத்தின் சேர்மன் அவர்கள் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிறுத்த நிழற்குடை (நிழலகம்) அமைக்க நெடுஞ்சாலைதுறை கோட்ட பொறியாளருக்கு விண்ணபம்பம் செய்ததில், மேற்படி இடம் மாநகராட்சி பகுதியில் வருவதால் மாநகராட்சியின் தடையில்லா சான்று பெறப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளதால், தடையின்மைச் சான்று வழங்க கோரியுள்ளார். தடையின்மைச் சான்று வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில், கல்வி நிறுவனத்தின் சொந்த நிதியில், நெடுஞ்சாலை துறையின் அனுமதி பெற்று மாநகராட்சி அலுவலர்களின் முன்னிலையில் பணிகள் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்து தடையின்மைச் சான்று வழங்கலாம்<br>இ1/7761/2012 | 115) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 22. இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடு செய்யும் நிதி திட்டம் 2011–2012ன் கீழ் (Operation and Maintenance Gap filling fund 2011–2012) இம்மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் பம்பிங் ஸ்டேசனில் Standby-யாக ஒரு Pumpset நிறுவும் பணிக்கு இம்மாமன்றம் தீர்மான எண் 48 நாள் 30.03.2012 அன்று அனுமதி அளித்ததின் பேரில் கடந்த 02.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>1) மெசர்ஸ் ரவ்கால் அண்ட்கோ, மதுரை<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை<br><br>இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப விபரங்கள் சரியாக இருந்ததால் அதனுடைய Price bid 21.05.2012 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதம் தந்துள்ளனர்.<br><br>1) மெசர்ஸ் ரவ்கால் அண்ட்கோ, மதுரை – ரூ. 676612/–<br>2) மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை – ரூ. 660516/–<br><br>ஆனந்தா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தினரிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு ரூ.658716/– மேற்படி விலை விகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>மா.ந.க.எண் 06010/இ3/12 | 116) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 23. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் வாகனங்கள் ஒதுக்கீடு செய்தல் குறித்து இம்மாநகராட்சி பகுதியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள முத்தையாபுரம், சங்கரப்பேரி, அத்திமரப்பட்டி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல் போன்ற பகுதிகளையும் சேர்த்து 60 மாமன்ற வார்டுகளாக பிரிக்கப்பட்டு கடந்த 25.10.2011ல் இருந்து ஒருங்கிணைந்த மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே பழைய நகர்ப்பகுதியில் இருக்கின்ற வாகனங்களைக் கொண்டு தினசரி குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. இருப்பினும் முதல்நிலை குப்பைகள், இரண்டாம் நிலை குப்பைகள், வடிகால் கழிவு மண்ணை அகற்றும் பொருட்டு கீழ்க்கண்ட வாகனங்கள் தேவைப்படுகிறது. எனவே அவசியம் அவசரம் கருதி கீழே குறிப்பிட்டுள்ள வாகனங்கள் வாங்குவதற்கும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) TATA ACE – 4 எண்ணம்<br>2) 40HP அளவுள்ள – டிராக்டர் டிப்பர் – 1<br>3) 4 டன் அளவுள்ள – 2 டிப்பர் லாரி மினி (ASHOK LEYLAND)<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்<br>எச்1/8025/12 | 117) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 24. தூத்துக்குடி மாநகராட்சி பழைய பகுதிகளுடன் மீளவிட்டான், சங்கரப்பேரி, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி ஆகிய பஞ்சாயத்து பகுதிகள் இணைத்து கடந்து 25.10.2011 முதல் ஒருங்கிணைந்த மாநகராட்சியாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. தற்போது இம்மாநகராட்சியில் பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்கள் மற்றும் அலுவலர்களின் வாகனங்கள் ஆக மொத்தம் 31 வாகனங்கள் இயங்கி வருகின்றன. இம்மாநகராட்சியில் ஒட்டுனர்கள் மொத்தம் 21 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். எனவே 10 வாகனங்களுக்கு ஓட்டுனர் இல்லாத நிலை உள்ளது.<br>இம்மாநகராட்சியில் புதியதாக ஓட்டுனர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு உரிய அனுமதி பெறப்படாத நிலையில் இருப்பதால் இம்மாநகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் Roc.No.5117/2012/133 நாள் 13.03.2012ல் குறிப்பிட்டுள்ளபடி TEXCO நிறுவனத்தாரிடம் அவசர அவசியம் கருதி, ஐந்து கனரக ஓட்டுனர்கள், ஐந்து இலகுரக ஓட்டுனர்கள் ஆக மொத்தம் 10 ஓட்டுனர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்<br>எச்1/8024/12 | 118) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 25. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் தற்போது மாநகராட்சியாக விரிவுபடுத்தப்பட்ட நிலையில் கொசு புகையடிக்கும் இயந்திரங்கள் பற்றாக்குறையாக உள்ளன. மேலும் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை சீராக மேற்கொள்வதற்கு கூடுதலாக இரண்டு பெரிய கொசுப்புகை அடிக்கும் இயந்திரமும், இரண்டு சிறிய கொசுப்புகை அடிக்கும் இயந்திரமும் வாங்கி பயன்படுத்திடவும் அதற்கான உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்<br>எச்1/8062/12 | 119) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 26. இம்மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு மேற்கில் மாநகராட்சியால் சாலையோர பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பூங்காவிற்கு மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் “பாரத ரத்னா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பூங்கா’’ என பெயரிட மாமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி மாமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையின்படி அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் வழியாக உரிய கருத்துரு அனுப்பி வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அரசின் அனுமதி பெற்று பூங்காவிற்கு பெயர் சூட்ட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எப்1/8058/2012 | 120) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>27. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளுக்கும் தற்போது கழிவுநீரை அகற்ற மூன்று கழிவுநீர் வாகனங்கள் (Sullage lorry) பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக இரண்டு கழிவுநீர் வாகனங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ஐந்து கழிவுநீர் லாரிகள் இம்மாநகராட்சி அனைத்து பகுதிகளிலும் கழிவுநீர் அகற்றும் பொருட்டு தினசரி ஒதுக்கீடு செய்து அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது கழிவுநீர் லாரிகள் வீடுகளிலும் மற்றும் வணிக நிறுவனங்களிலும் கழிவுநீர் எடுப்பதற்கு கீழ்க்கண்டவாறு சேவைவரி நிர்ணயம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>வீடுகளுக்கு வாரம் ஒரு முறை கழிவுநீர் அகற்றிட</td><td>ரூ.50/-</td></tr>
<tr><td>2.</td><td>பெரிய வணிக நிறுவனங்களான திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், வணிக வளாகங்கள், தங்கும் விடுதிகள், மருத்துவமனைகள் (Hospital) அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் பெரிய நிறுவனங்களில் கழிவுநீர் அகற்றிட</td><td>நடை ஒன்றுக்கு ரூ.1500/-</td></tr>
<tr><td>3.</td><td>சிறிய வணிக நிறுவனங்கள், டிபன் சென்டர், டீ ஸ்டால், நைட் கிளப், பேக்கரி மற்றும் அனைத்து சிறிய வணிக நிறுவனங்களில் கழிவுநீர் அகற்றிட</td><td>நடை ஒன்றுக்கு ரூ.500/-</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம். எச்1/8108/12</td>
<td>121) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>28. இம்மாநகராட்சி பகுதியில் கிழக்கே கடற்கரையிலிருந்து மேற்கே 3வது மைல் வரை சுமார் 6 கி.மீ. நீளத்திற்கு செல்லும் பக்கிள் ஓடையில் 4 கட்டங்களாக மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேம்பாட்டு பணியில் தரைதளம் மற்றும் கரையின் இரண்டு பக்கங்களிலும் கான்கிரீட் சுவர்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. சுவர்கள் தரைமட்டம் வரை அமைக்கப்பட்டுள்ளது. பக்கிள் ஓடையின் தென்புறம் கடற்கரை முதல் புதிய பேருந்து நிலையம் வரை தார்சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பாதுகாப்பான வாகன போக்குவரத்திற்கு வசதியாக பக்கிள் ஓடையின் இரு சுவர்களிலும் கிரில் கம்பிகள் வைக்க தனியார் நிறுவனங்கள் முன் வருகின்றன. பக்கிள் ஓடையின் இருபுறங்களிலும் உள்ள சுவர்களின் மேல் கிரில்கம்பிகளை வைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும், அவ்விடத்தில் பூங்காக்களை அமைத்து பராமரித்துக் கொள்ளவும், தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பல தரப்பினரும் அனுமதி கோரும் நிலையில், அதற்கான மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்து நலன்கருதி அனுமதிக்கலாம். இ1/2423/2012</td>
<td>122) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>29. தூத்துக்குடி மாநகராட்சி ஜார்ஜ் ரோடு தொடர்ச்சி, பாத்திமா நகர் பகுதியில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக அதிகளவில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதை சரி செய்யும் பொருட்டு மாநகராட்சி விதி 15ன் கீழ் ரூ. 38317/- செலவு செய்ததை மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்<br>மதிப்பீடு எண்.207/11-12</td>
<td>123) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>30. வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் நீர்மட்டம் குறைந்து, கிணறுகளிலிருந்து பம்பிங் குறைவதை சரிசெய்ய, கிணறுகளை சுற்றி பொக்லைன் எந்திரம் மூலம் மண்மேடுகளை அகற்றி வாய்க்கால் ஏற்படுத்த மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 99500/- செலவு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்<br>மதிப்பீடு எண்.12/12-13</td>
<td>124) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.

மாமன்றம், தூத்துக்குடி
நாள்: 30.05.2012